கவன ஈர்ப்புகள்

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த விவசாயிகளைப் பொறுத்த வரையில் அறுபதாயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்டு பாசன தண்ணீர் அளிக்க ஆணை வழங்கப்பட்டது என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், கோவை மாவட்டத்தில் வறட்சி நிலை மிகவும் அதிகமாக இருக்கிறது என்று தெரிந்துதான் பாசன ஏரியா விவசாயிகளினுடைய கூட்டம் ஜனவரி மாதம் 10ஆம் தேதியும், 23ஆம் தேதியும் கூட்டப்பட்டு 4½ மாதங்களுக்கு அவர்களுக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் இந்த வருஷம் முறைப்படி தண்ணீர் கொடுக்க தகுதி இல்லாத பகுதிகளுக்கு, குளம், குட்டைகளுக்குத் தண்ணீர் விடுகிறோம் என்ற பெயரால் அங்குள்ள அதிகாரிகளாகத் தண்ணீர் விட்டதன் பலனாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் நியாயமாகக் கிடைக்கவில்லை. அவர்கள் பெரிய நஷ்டத்திற்கு ஆளாகி உள்ளார்கள். ஆகவே, இவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதற்கு வேண்டிய நஷ்டயீட்டைக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புவதோடு, அவர்களுக்கு இப்பொழுது தண்ணீர் முறையாக விளைச்சலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின்படி முறையாகத் தண்ணீர் விட வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் அரசு ஆணை வழங்கி, இருக்கின்ற அளவுக்குத் தண்ணீரை வழங்கியிருக்கிறது. குளம், குட்டைகளுக்கும் தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. ஏதாவது உறுப்பினர் கூறுவது போன்று தவறு எங்கேயாவது நடந்திருக்கிறது என்று தெரிய வந்தால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

(42) கோவை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடனை ஒத்திவைத்தல் குறித்து

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கோவை மாவட்டத்தில் தற்சமயம் கடும் வறட்சி நிலையுள்ளதால் கூட்டுறவுக் கடன் வசூலில் மேற்கொள்ளப்படும் கடுமையான நடவடிக்கையின் காரணமாக அம்மாவட்ட விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

கவன ஈர்ப்புகள்

(திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்)

அறிக்கை.

கோவை மாவட்டத்தை பொறுத்த மட்டில் வறட்சி ஏற்பட்டுள்ளதாக அம்மாவட்ட ஆட்சியாளரால் அறிவிப்பு ஏதும் இதுவரை வழங்கப்படவில்லை. கூட்டுறவுக் கடன்களின் வசூலைப் பொறுத்தவரை, கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் தேதிய நிலவரப்படி தவணை தவறிய கடன்களின் நிலுவை 77 விழுக்காடு ஆகும். 1986ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் உடன் முடிவடையும் காலத்திற்கு இவ்வங்கியின் மொத்த கேட்பு ரூ. 1,360.34 இலட்சம் ஆகும். 1986ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளுக்குள் இவ்வங்கி தனது கேட்பை 40 விழுக்காடு அளவுக்கு குறையாமல் கடன்களை வசூல் செய்தால்தான் 1986–87ஆம் ஆண்டிற்கு தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண்மைக்கான வங்கியிடமிருந்து (NABARD) வேளாண்மைக்கான கடன்கள் வழங்குவதற்கான கடன் அளவுகளை பெற இயலும். இந்நிலையில் கடன்கள் வசூல் தீவிரப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனினும் கடன்களின் வசூல் பொதுவாக அணுகு முறையின்மூலமே மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாக செலுத்தப்படாத கடன்களை வசூல் செய்தாலன்றி, கூட்டுறவு வங்கி "நாபார்டு" வங்கியிடமிருந்து கடன் அளவுகள் பெறுவதற்கு இயலாது என்ற காரணத்தால் கீழ்க் கண்ட பிரிவினரிடமிருந்து மட்டுமே சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு அனுமதித்துள்ளது.

(1) சட்டபூர்வ நடவடிக்கைக்கு பயந்து தமது சொத்துக்களை துண்டுபோடும் உறுப்பினர்கள் ;

(2) கறவை மாடுகள் வாங்குதல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற உப தொழில்களை மேற்கொள்ள விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மத்திய கால கடன் பெற்று வாங்கிய காரியத்திற்கு பயன்படுத்தாதவர்கள் மற்றும் கடன் தொகையை திருப்பிச் செலுத்தும் முன்னர் ஆடுகள், மாடுகள் மற்றும் கோழி போன்றவற்றை விற்க முயலுபவர்கள்/ விற்றவர்கள்:

(3) தொழில், வணிகம் செய்பவர்கள், திரையரங்கு' அரிசி ஆலை உரிமையாளர்கள், மாத சம்பளம் பெறுபவர்கள், மற்றும் வழக்குரைத்தல், மருத்துவம் போன்ற தொழில்களை மேற்கொண்டு உள்ளவர்கள் போன்று உபரி வருவாய் உள்ளவர்கள்;

(4) கடந்த ஐந்தாண்டுகளாக நிலுவையில் உள்ள நிறைவேற்று மனுக்கள் தொடர்புள்ள கடன்தாரர்கள் : மற்றும்

கவன ஈர்ப்புகள்

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

(5) பத்து ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலம் வைத்திருப்பவர்கள்.

இப்பிரிவினர்களுக்கு சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் தகுந்த அறிவிப்புகள் அளிக்கப்பட்டு அவர்கள் குறிப்பிட்டுள்ள கால கெடுவுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுவார்களேயானால், அவர்களின் மேல் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிவரும்.

சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கும்போதும் விவேகமான முறையில் நடந்து கொள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1986—87 ஆம் ஆண்டில் கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் எல்லையில் 900 இலட்சம் ரூபாய் அளவிற்கு குறுகிய கால வேளாண்மை கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுளளது. 30—6-1986-க்குள் தவறிய கடன்களை வசூல் செய்து ''நாபார்டிடம்'' இருந்து கடன் அளவு பெறவும் தகுதியினை இவ்வங்கி பெற்றால் அன்றி 1986-87-ம் ஆண்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டினை அடைய இயலாது.

திரு. ஆ. நடராசன் : : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கோவை மாவட்டத்தை பொறுத்தமட்டில் வறட்சி ஏற்பட்டுள்ளதாக அம்மாவட்ட ஆட்சியாளரால் அறிவிப்பு ஏதும் இதுவரை வழங்கப்படவில்லை என்று குறிக்கப்பட்டுள்ளது உள்ளபடியே வருந்தக்கூடிய நிகழ்ச்சியாகும். கோவை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் கடுமையான வறட்சியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தென்னை மரங்களெல்லாம் காய்ந்துள்ளன. அந்த மாவட்டம் முழுவதும் குறிப்பாக, என்னுடைய பேரூர் தொகுதியிலே குடிப்பதற்குக்கூட குடி தண்ணீர் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நிலைமையில் விவசாயிகளிடமிருந்து கடனை கடுமையான முறையில் வசூலிக்கின்ற நடவடிக்கையை அரசு கைவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வருவாய்த் துறையிலிருந்து, வறட்சி என்று எங்களுக்கு அறிக்கை வரும் என்று சொன்னாலும், கடனைக் கட்ட வேண்டிய காலத்தை நாங்கள் நீட்டித்து கொடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அங்கே வறட்சி ஏற்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் மிக வேகமாக, கடுமையாக இல்லாமல் விழுக்காடு வசூலிக்க வேண்டுமென்ற உணர்வோடு, சரியான அணுகுமுறையிலே வசூலிக்க நடவடிக்கை எடுக்கிறோம்,